சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் சென்னை-08

ந.க.எண். 4491/ஆ4/2024, நாள். 03.07.2024

பொருள்: பள்ளிக் கல்வி - சென்னை மாவட்டம் - சுற்றுச்சூழல் கல்வி - 2024-2025 கல்வியாண்டில் சுற்றுச் சூழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்துதல்- சென்னை மாவட்டத்தில் உள்ள அனைத்து வகை பள்ளிகளிலும் வன மகோத்சவம் விழா (ஜூலை முதல் வாரம் ) மற்றும் உலக மக்கள் தொகை தினம்(ஜூலை 11) கொண்டாடுதல் – சார்ந்து.

.....

மேற்காண் பொருள் சார்ந்து ஒவ்வொரு ஆண்டும் ஜூலை மாதம் முதல் வாரத்தில் மரம் நடுதல் மற்றும் பராமரிப்பை ஊக்குவிக்கும் வண்ணம் " வன மகோத்சவம்" விழா கொண்டாடப்படுகிறது. இதனை முன்னிட்டு அனைத்து பள்ளிகளிலும் மரம் நடுதல், மூலிகைத் தோட்டம் /காய்கறித் தோட்டம் அமைத்தல் மற்றும் இயற்கை சூழலை பாதுகாக்கும் மரங்களின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு வகுப்புகள் நடத்துதல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

மேலும் 2024 ஜூலை 11ஆம் நாள் உலக மக்கள் தொகை தினத்தையொட்டி பள்ளி மாணவர்களுக்கு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, ஓவியப் போட்டி நடத்தவும், பொது மக்களுக்கு இதனை சார்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பேரணிகள் நடத்தவும் தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இந்நிகழ்வுகளை GPS கேமிராவில் புகைப்படம் எடுத்து அறிக்கையாக முதன்மைக் கல்வி அலுவலக மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு அனைத்து வகை பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

3/7

முதன்மைக்கல்வி அலுவலர்

சென்னை

3/7/2024

பெறுநர்

அனைத்து வகை பள்ளி தலைமையாசிரியர்கள், சென்னை மாவட்டம்.

நகல்

1. கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி,சென்னை.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை, தொடக்கநிலை மற்றும் தனியார்) சென்னை மாவட்டம்.